Registered No. M. 408.

உ

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசு.

திங்கட்கொருமுறைதோன்றித்திகழ்வது.

THE THIRUNAVUKARASU.

PUBLISHED ONCE IN A MONTH.

பத்திராதிபர்—தி. பா. சிவராமபிள்ளை.

புத்தகம் ௨] திருநெல்வேலி: விசுவாவசு௵ சித்திரைமீ ௰௮-உ; 1905-ம்௵ மேமீ 1-உ [இலக்கம் ௪.

"அகர முதல வெழுத்தெல்லா மாதி, பகவன் முதற்றே யுலகு."

உ

திருச்சிற்றம்பலம்.

"காண்டகு மலைமகள் கதிர்நிலா முறுவல்செய் தருளவேயும், பூண்டநாகம் புறங்கா டரங்கா நடமாடல் பேணி, யீண்டுமா மாடங்கண் மாளிகை மீதெழு கொடி மதியந், தீண்டிவந் துலவிய திருநெல்வேலியுறை செல்வர் தாமே."

"மதிநுதன் மங்கையோடு வடபா லிருந்து மறையோது மெங்கள்பரம, னதியொடு கொன்றை மாலை முடிமேலணிந்தெ னுளமே புகுந்த வதனாற், கொதியுறு காலனங்கி நமனோடு தூதர் கொடுநோய்களான பலவு, மதிகுண நல்ல நல்ல வவைநல்ல நல்ல வடியா ரவர்க்கு மிகவே."

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சிதம்பரம்.

செந்தமிழ்ச்சங்கம்.

அகர வுயிர்போ லறிவாகி-யெங்கும்
நிகரிலிறை நிற்கு நிறைந்து.

இத் தலைப்பெயர்பூண்ட சங்கம் ஸ்ரீ சிதம்பரதலத்தில் தாபிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றது. பெரும்பான்மையும் செந்தமிழை அபிவிர்த்திசெய்வித்து விளக்கமுறுவிக்க வேண்டுமென்பதே இச்சங்கத்தவரின் கடமைப்பாடான பெருங் கொள்கையாம்.

இச்சங்கத்து நடைபெறும் விஷயங்களாவன:—

௧. செந்தமிழையும் அச் செந்தமிழால் யாக்கப்பட்டு நிலவுவனவாகிய சங்க இலக்கியம், காவிய இலக்கியம், புராண இலக்கியம், நீதி இலக்கியம், சாத்திர இலக்கிய முதலியவற்றையும் இலக்கணவமைதியோடு தொகை வகை விரியாகச் சொன்னயம் பொருணயந் தோன்ற ஒவ்வொரு விஷயமாகவும் தொடர்ச்சியாகவும் வாரமொரு முறை பிரசங்கித்தல்.

௨. மேற்கூறியாங்கு பிரசங்கிக்கப்படும் விடயங்களை வேண்டுமளவு அனுவதித்தெடுத்து ஆமவற்றைக்கூறி அக்கிராசனாதிபதியவர்கள் சிறிது நேரம் உபந்நியசித்தல்.

௩. இவ்விருதிறத்தும் பேசப்பட்டனவற்றைக் காரியதரிசியவர்கள் சொற்பொருட்டொடர்விளங்கச் சுருக்கி எழுதிப் பத்திரிகைவாயிலாக அவ்வப்போது வெளியிட்டுப் பரவச்செய்தல்.

௪. செந்தமிழின் அருமை பெருமைகளை விளக்கும் நூலுரைகளைச் செய்தல். அவற்றை வெளியிடுதல்.

௫. இச்சங்கத்தில் மெம்பர்களாகச் சேர விரும்புவோர் உள்ளூராராகவேனும் வெளியூராராகவேனு மிருக்கலாம். சேருவோர் சங்காபிவிருத்தியின்பொருட்டு வருடம் ஒன்றுக்கு ரூபா மூன்றுவீதம் செலுத்திவரல் வேண்டும்.

௬. அவ்வாறு கூடும் பொருளைச் சங்காபிவிருத்தியின்பொருட்டே செலவுசெய்து, வரவு செலவுக்கணக்கு முறைமையாக எழுதி வருடபூர்த்தியிற் படிக்கப்படும்.

௭. மேற்கூறியதொகையை உள்ளூரார் மாதமாதமும், வெளியூரார் வருடமுதலிலும் செலுத்தி வரல்வேண்டும்.

௮. வெளியூரார் தத்தம்விலாசத்தைக் கடிதமூலமாக அறிவித்தல்வேண்டும்.

௯. சங்கத்தில் சேர்ந்தவர்களுக்குச் சங்கத்தாரால் வெளியிடப்பட்ட பத்திரிகைமுதலியன சமயோசிதமாக அனுப்பிவரப்படும்.

௰. இன்னும் இச் சங்கசம்பந்தமான விடயங்களெல்லாம் தெளிவாக எழுதிப் பின்னர் வெளியிடப்படும்.

வெளியூரார் பணமனுப்புவதனை இச் சங்கத்தின் காரியதரிசியவர்களாகிய S. A. திருமலைக்கொழுந்துப்பிள்ளை அவர்கள் விலாசத்துக்கு அனுப்புவிக்கற்பாலர்.

தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்.

அக்கிராசனாதிபதி
☞ தரு. ஞா. சண்முகத்தம்பிரான்.

காரியதரிசி
☞ சி. அ. திருமலைக்கொழுந்துப்பிள்ளை.

குரோதி௵ மாசிமீ 27-உ } தனபாலகர்
☞ வை. சுவாமிநாதசெட்டியார்.

கையொப்பவிகிதம்:— உள்ளூர், வெளியூராருக்குத் தபாற்கூலி யுட்பட முன்பணமாக ஒரு வருஷத்திற்கு ரூ. 1. மோரீமேன் சிங்கப்பூருக்கு ரூ. 2. தனிப்பிரதி 1-க்கு அணா 2.

உ

சிவமயம்.

திருநாவுக்கரசு.

திருச்சிற்றம்பலம்.

"இலைமா டென்றிடர் பரியா ரிந்திர னேயொத்
துறுகுறை வற்றாலு, நிலையா திச்செல்வ மெனவே கரு
துவர் நீள்சன் மக்கட லிடையிற்புச், கலையார் சென்றா
னெறியா குங்கரை யண்ணப் பெறுவர்கள் வண்ணத்
திண், சிலைமா டந்திகழ் புகழா ரூருறை திருநா வுக்கர
சென்போரே."

திருச்சிற்றம்பலம்.

வைதிகசைவ பரிபாலன சபை.

இக்காலத்தே, இப்பரதகண்டத்துள்ள தமிழ்நாடுகள் பலவற்றினும், "வைதிகசைவ பரிபாலனம்" என்னும் சிவதருமம் மிகவும் அருகியே காணப்படுகின்றது. ஆயினும் யாழ்ப்பாணம், அவ்விஷயத்தில் மெய்ம்மறந்திருக்கவில்லை; தன்னாலியன்றவளவும் மிக நன்றாக முயல்கின்றது. இச்சமயத்திலே, அதனோடு இவ்விந்தியாவிலே உள்ள தமிழ்நாடுகளும் சேர்ந்துகொண்டால், நமது "வைதிக சைவம்" எனப் பெயரிய கற்பகதரு மிகவும் செழித்தோங்கி, மும்மையின்பமும் முறைமையின் ஒருங்கே உயிர்கட்குதவாநிற்கும்.

யாழ்ப்பாணத்திலே, "வைதிகசைவ பரிபாலன சபை" யொன்று சமீபகாலத்திலே கூட்டப்பட்டிருக்கின்றமை முன்னரே, நமது "திருநாவுக்கரசு" இரண்டாம் புத்தகம் இரண்டாம் இலக்கப் பத்திரிகையிலே குறித்தாம். அதனை நமது பத்திரிகை படிப்போர் பலரும் அறிந்திருக்கலாம். இப்பொழுது அச்சபையார்களே தாம் எடுத்துக்கொண்ட இவ் "வைதிக சைவ பரிபாலன" விஷயத்திலே, மற்றைத் தேசத்தவரும் அறிவொற்றுமை யுடையர்களாய்த் தம்மோடுடனின் றுழைக்கும்படி வேண்டுகின்றார்கள். அக்கருத்துக்கிணங்கி, அவ்வாறே செய்து, மும்மையின்பமும்பெற் றுய்திகூடும்படி யாமும் எமது பத்திரிகைபடிப்போரையும் அவர்மூலமாய் நமது நாட்டவர் பலரையும் ஒருங்கே அன்பும் பணிவும் பொருந்தத் தூண்டுகின்றோம். அச்சபையாரது துணிபும் வேண்டுகோளும் நம்மவர்க்கு நன்கு புலப்படுமாறு, குறித்த சபையாரால் வெளியிடப்பட்டிருக்கும் "வைதிகசைவ பரிபாலினி" யில் அவர் எழுதியிருக்கும் விஷயத்தையே ஈண்டுப் பிரசுரித்துத் தருகின்றோம். அது வருமாறு:—

வைதிகசைவ பரிபாலினி.

"உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

வைதிகசைவ பரிபாலன சபை.

"முந்துமின்!! முந்துமின்"!!!

ஸ்ரீலஸ்ரீ ______________________ சந்நிதானத்துக்கு யாழ்ப்பாணம் வைதிக சைவ பரிபாலன சபையார் எழுதும் விக்கியாபனம்:—

வைதிகசைவச்செல்வரோ!

இலங்கையில், யாழ்ப்பாணத்தில் கூடிய வைதிகசைவபரிபாலன சபையின் விருத்தாந்தங்கள், விதானங்கள் அடங்கிய* பத்திரிகைகள் இத்துடனனுப்பியிருக்கிறோம். தாங்களும் தங்களிஷ்டர்களும் அவைகளைப் பார்வைசெய்து, சபையின் நோக்கமறிந்து, அதற்குச் சார்பாயாவது, வேறு தாங்கள் நன்றென்று எண்ணுகிற எவ்வாறாயாவது, தங்கள் வீட்டில், கிராமத்தில், பட்டினத்தில், நாட்டில், தேசத்தில், இராச்சியத்தில் வைதிக சைவரைத் தனித்தனி கண்டு தெரிந்து ஒன்றுகூடி, வைதிகசைவபரிபாலன சபையாக்கி இராச்சியம் முழுமைக்கும் மகாசபையும், தேசங்கள், ஜில்லாக்கள், தாலுகாக்கள் டிஸ்திரிக்கற்றுக்களாதியாம் பிரிவுகளுக்கு, ஏற்ற ஏற்றபடி கிளைச்சபைகளும் கூட்டி, அவற்றிற்காக வேண்டிய சட்டங்களையு மேற்படுத்தி, இவ்வாறு ஏற்படும் சபைகள் யாவையும் நமது வைதிகசைவபரிபாலன சபையுடனிணைத்து ஒன்றாக்கி, இவ்வாறே வைதிகசைவ பரிபாலனத்தை ஒருமொழிக்கமைய நின்று (தழைய அஞ்செழுத்தோசை தரையெலாம் பழைய வைதிகசைவம் பரக்கவே) நடப்பிப்பதற்குத் திருவுள்ளம் கொண்டருளுமாறு வேண்டுகிறோம். "வைதிகசைவபரிபாலினி" என்னும் பத்திரிகைகளில் சபையின் கருத்துத் தெளிவாயறிய வமைந்திருக்கின்றன.

இந்தியா முதலாமிடங்களில் வைதிகசைவப் பிரசித்தியின் பொருட்டுச், சர்வசங்கபரித்தியாகிகளாயும், சைவசிரோன்மணிகளாயும், சிவாநுபூதிச் செல்வராயும் எமக்கு முன்னிருந்து அருவகலையடைந்த மகாராசராசாக்களும், மகாப்பிரபுக்களும்,

* வேண்டுவோர் "இலேககர்" அவர்கட்கெழுதிப் பெற்றுக்கொள்க. ... ப. ர.

மற்றையோரும் பிற்காலத்தார் பொருட்டும் சங்கற்பித்துவைத்த சிவாலயங்கள், ஆதீனங்கள், ஆஸ்திகள் யாவும், தற்காலம் எவ்வித நிலையிலிருக்கின்றன வென்பதை, தங்கள்போலும் மகான்களும், வித்வசிரோன்மணிகளும், பிரபுக்களும், சிவபக்தரும் கண்டும் காணாதார் போலவும், கேட்டும் கேளாதார்போலவும், வாளா வீணாட்கழித்தலால், உலகிலுள்ள வைதிகசைவரை ஒருங்கு கூட்டவும் அவற்றிற்காய பொருளீட்டவும் புல்லறிவாண்மையுடையேங்கட்கு முயற்சியுள்ளதாயிற்று.

தற்காலத்து வைதிகசைவராயினோர் முற்காலத்துள்ள வைதிகசைவர்க்கு இம்மை மறுமை யீரண்டிற்கும் ஏதுவாயிருந்த உதவிகளாகிய அரசு அமைச்சு முதலியவை இக்காலத்து இல்லாக்காரணத்தால தற்காலம் வைதிக சைவம் வரவர அருகுகின்றது என்று வாளா வீணாட்கழிக்கின்றனர். இவ்வியல்பினர், முக்காலங்களிலுமுள்ள வைதிகசைவ உலகிற்குசத்தாய் ஏக சக்கிராதிபதியாய், ஸ்ரீமந் நடராஜர் தமக்கு அமைச்சாக, ஸ்ரீ சிவகாமியம்மையாரை வாமபாகத்துக்கொண்டு, கனகசபையாகிய அத்தரணியிலெழுந்தருளி, வேதசிவாகமங்களைக் கட்டளைச் சட்டமாகக் கொண்டு, என்றும் அநுக்கிரக அரசு புரிவதை, உள்ளும் புறமும் காணாத குருட்டுச் சேரியின் அந்தகரன்றி வேறியார்?

ஆகலான் முற்காலத்து வைதிக சைவராயினோர்க்குளவாயிருந்த ஏதுக்களில், இக்காலத்தார் யாதும் குறைவுடையரல்லர். பின்னர் இவ்வியல்பினையுடைய உலகைச் சீர்திருத்தத்தக்க ஆன்றோர் தாங்களேயன்றி வேறியார்? வேந்தரியல்பு, வேடுவரியல்பாயிருத்தல் தகுமோ?

வைதிகசைவம் பிரபல்யமாய் விளங்கிய முற்காலத்துள்ள வைதிகசைவச் செல்வர்களில் எச்சமற்று ஒருவராயினும் இக்காலத்து இலராயினரோ? அவ்வாறாய எச்சமிருக்கின், அவ்வவர் தத்தம் முன்னோரால் தாபிக்கப்பட்ட ஆலயங்கள், ஆதீனங்கள், சத்திரங்கள், ஆஸ்திகள் யாவும் முன்னோருடையநோக்கம்போல வைதிகசைவபரிபாலனத்துக்குபயோகமாகி வருகின்றனவோ அல்லவோ என்பதைத் தத்தம்மரபுரித்துப்படி ஆராய்ந்து அவற்றிற்கானவைகளை முயற்சிசெய்து வராததென்னையோ? வேடுவரியல்புநீங்கி வேந்தரியல்படையுங்காலமின்னுமணுகவில்லையோ? சேரிகுருடோ? கண்குருடோ? இதுவிஷயத்தில் வைதிகசைவச் செல்வர் யாவரும் தனித்தனியேயும், குடும்பம் குடும்பமாயும், வம்மிசம வம்மிசமாகவும், கிராமம் கிராமமாகவும், நாடுநாடாகவும், தேசம் தேசமாகவும், இராச்சியம் இராச்சியமாகவும் ஒன்றுகூடிக் கதித்தபகுதியாகி, முன்னோரால் வைதிகசைவபரிபாலனத்துக்கென்று ஏற்படுத்தப்பட்டவைகளை இப்போதிருக்கிற சிறையிலிருந்து நீக்கியும், நீக்குவித்தும், விடுதலைசெய்தும், செய்வித்தும், முன்னோருடைய நோக்கம்போலவே "தழைய அஞ்செழுத்தோசை தரையெலாம், பழையவைதிக சைவம பரக்கவே" என்றருளப் பெற்றிருக்கிறபடி நேரே வைதிகசைவம் பரக்குமாறு உபயோகித்தலும், உபயோகிப்பித்தலும் அதற்காயவைகளை நடப்பித்தற்குத் தம்மைச் சிவார்ப்பணஞ் செய்து நிற்றலும், எப்புண்ணியத்தினுக்கு நேரென்பதை கிருபைகொண்டு சிந்திக்கவும வேடுவகோலத்தை நீக்கி ஸ்ரீமந் நடராஜபுத்திர கோலத்தைக்கொண்டு தம் உடன்தாயாதிகளையும் துணைப்படைவராக் கண்டியற்றுமாறு தங்களை மிக்க அன்புடன் பிரார்த்திக்கலாயினோம்.

மேலும் வைதிகசைவர் ஒன்று கூடவும் தத்தம் வருப்படிகளில் யாதுமோர் பாகத்தை ஸ்ரீமந் நடராஜாவுக்கேற்ற வரியாகக் கொடுத்துவரவும் அவ்வரும்படிகளைக்கொண்டு வைதிகசைவபரிபாலனத்தலையாய அரசியலுக்காக வேண்டியவைகளைச்செய்துவரவும் இப்போதே இச்சபையுடன் தொடங்கி நடத்தி வரவும், தங்களையும் தங்களையொத்தார் மிக்கார் யாவரையும் மேலேகாட்டிய ராசபுத்திரர் கோலந்தரித்து வெளிவர வேண்டுகின்றோம். வைதிக சைவம் பரக்கவேண்டி இந்தியாவிலும் பிறவிடங்களிலும் ஏற்படுத்தப்பட்ட நிதியங்களில், இப்போது அறிவும் ஆற்றலும் காதலுமில்லாத பிராகிருதர் வசப்பட்டிருக்கிற திரவியங்கள் எப்படியாவதிருக்க, அவற்றினிடத்திச்சைநீக்கித் தத்தம் உடல் பொருள் ஆவி முழுவதையும் பிறிதோராலோசனையின்றிச் சிவார்ப்பணஞ்செய்து இவ்வரிய பெரிய செயலை முயலவும் முயலுபவர்களுடன் கூடி முயற்சிசெய்யவும் திருவருள்பாலிக்க.

"ஞானவாளேந்துமையர்நாதப்பறையறைமின்
மானமாவேறுமையர்மதிவெண்குடைகவிமி
ஞனநீற்றுக்கவசமடையப்புகுமின்கள்
வானவூர்கொள்வோநாமாயப்படைவாராமே"

"தொண்டர்காடூசிசெல்லீர்பத்தர்காள்சூழப்போகீ
ரொண்டிறல்யோகிகளேபேரணியுந்தீர்க
டிண்டிறற்சித்தர்களேகடைக்கூழைசென்மின்க
ளண்டர்நாடாள்வோநாமல்லற்படைவாராமே"

இங்ஙனம்
ஸ்ரீமந்நடராஜவாசற் கட்டளை பறைசாற்றும்
அடித்தொண்டன்
அரு. சிவரத்நம்
வைதிகசைவபரிபாலனசபைப்
இலேக்கர்".

உ

ஓர் பிரார்த்தனை.

கடவுளே, உன்னை வாழ்த்துவதையே நாடுகின்றது என் மனசு. உனது வடிவம் எத்தன்மையது எனச் சிந்திக்கில், "இவன் இறைவன் என்றெழுதிக்காட்டொணாதே" எனப்பெரியோர் கூறுவதால் இப்புலக்கண்ணிற்கு விளங்கமாட்டாய் என்பது ஊஹிக்கப்படுகின்றது. ஆனால் பக்தர்கள் எவ்வாறு தியானிக்கின்றனரோ அவ்வாறு உன்னை வெளிப்படுத்துகின்றாய் என்பது உணரப்படுகின்றது. இதற்காக ஓர் மதம் விட்டு மறுமதம் புகுவதாற் பயனுளதோ என விசாரிக்குங்கால், சகல மதங்களும் ஒருப்போலவே, உன்னை சர்வவியாபகன், சர்வஞ்ஞன், சர்வஜீவகாருண்யன், சர்வவல்லவன் என வழுத்துகின்றன. ஆதலால் அவனவன்பிறப்புற்ற மதக்கொள்கையை உட்புறம் ஒத்துத்தழுவி நிற்றலே சிறப்பு. ஆனால் மதங்களுக்குள் வேற்றுமை இல்லையோ எனச்சங்கிக்குங்கால், அவ்வம்மதஸ்தாபகரது அநுபவச் சிறப்பினால் உன்னைச்சுலபமாய் அடைவதற்கமைந்த அனுஷ்டான வழிபாடுகள் அமைக்கப்பட்டிருக்கலாம். அவற்றில் பேதம் இருக்கக்கூடும். மற்றப்படி அந்தரங்கத்தில் வேற்றுமையின்று. கரவிலா நெஞ்சம் ஒன்றுளதேல் அதுவே அமையும். "கரவாடும் வன்னெஞ்சர்க்கரியானை; கரவார்பால் விரவாடும் பெருமானை" நினைப்பவர் மனங் கோயிலாக் கொண்டவன்" என்னும் அருமை வாக்குகளே தக்க சான்றாம். ஆகையால் சர்வ அந்தர்யாமியாக விளங்கும் கடவுளே பரிசுத்தமான மனசை எனக்கு அருளுவாயாக. இவ்வுலகத்திலுள்ள எந்தக்காரியத்தையும் சித்திக்கச்செய்வதற்கு இடம் பொருள் ஏவல் எனும் சாதனங்கள் வேண்டப்படுவது போல, சித்தசுத்தி பெறுவதற்குப் பிற உதவிகள் வேண்டுமாறு நீ கற்பிக்கவில்லை. "அகந்தூய்மை வாய்மையாற் காணப்படும்" என்பதால் வாய்மை எனும் உண்மையைத் திரிகரணங்களாலும் ஆதரித்துவந்தால் அதுவே கரவை ஒழிக்கும். இதற்கு விசேட கல்வியாவது, பொருளுதவியாவது சரீரதிடமாவது, மனுஷ்ய உதவியாவது வேண்டுவன அல்ல. ஈச, நின்னை அடைவதற்கு இவ்வளவு இலகுவான வழியை வகுத்திருக்கிற உன்னைக்கண்டுணராத குற்றம் என்போலிகளுடையதேயாம். இந்நெறியை விட்டு வெளிப்பட எத்தனைவேடந் தரிக்கினும், எத்தனை மதங்களிற் புகினும், எவ்வளவு பொருள் செலவிடினும், என் ஆகும். எல்லாம் பயனற்ற செயலாகவே முடியும்.

ஆனால், கருணாநிதியே, நீ காட்டியிருக்கிற மார்க்கம் இலகுவாயினும், அதனை அடைவது சுலபமாகத்தோற்றாத காரணமென்னை? துரபிமானமேயாம். துரபிமானமாவது தன்னியல்பிற்கு மிஞ்சித் தன்னைமதித்துக் கொள்ளுதல் என ஒருவாறு பொருள் சொள்ளலாம். இத்துரபிமானம் எவ்வாறு நீங்கும்? உன்னை அடியிற்காட்டிய வண்ணம் பிரார்த்திப்பதினாலே ஒருவாறு நீங்கலாம்.

க. யான் எனது எதார்த்த ஸ்திதியை மறைத்துப் பிறருக்குப் பெருமையாகக் காட்டும் வழக்கத்தை ஒழிக்கத்தக்க மனோதிடத்தையும்,

உ. என்னையும் ஆதரித்துக் கொள்ளும் சக்தியற்ற குடும்பத்தையும் இரட்சிக்கும்பொருட்டு இயன்றவளவு முயன்று பொருள் தேடத்தக்க தேகசுகத்தையும் அறிவின்விளக்கத்தையும்,

ங. தன் பொருட்டாவது பிறர்பொருட்டாவது நிவிர்த்திக்க முடியாதவளவிற் கடன் கொள்ளாதிருக்கும் நிலைமையையும்,

ச. பழிபாவங்கட்கு இடந்தராதவாறு பரோபகாரம் புரிதலையும் அப்பரோபகாரச் செய்கையில் எதிர்ப்படும் இம்சைகளை இன்பமாக மதித்தலையும்,

ரு எனதுசிறுமையையும் நினது பெருமையையும் உணர்வதால்நிகழும் இன்பம் எய்தத்தக்க ஹேதுக்களையும்,

சு. "தன்கடன் அடியேனையுந் தாங்குதல்
என் கடன் பணிசெய்து கிடப்பதே"

எனும் நியாய உணர்ச்சியையும் தந்தருள்க.

இலக்குமணப்போற்றி.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

பன்னிரு திருமுறை யன்புப் பரிசில்.

மகா சிவபுண்ணிய பரிபாலன மகைஸ்வரிய மகௌதாரியப் பிரபுக்களாய்த் தேவையம் பதிக்கண்ணும், அமராபதி புதூர்க்கண்ணும் வசிக்கும் வணிகச் சிவநேயர்களுட் சிலர், கருங்குழி இராமலிங்கம்பிள்ளையைச் சார்ந்தவர்களால் மருட்பாமறுப்பு ஏதுவாக எம்மீது தொடுக்கப்பட்ட வழக்கில், எம்பக்கந் தோல்வியடைந்தாற் புறச்சமயிகளும் போலிச்சைவர்களும் திருமுறைகளை அவமதிப்பாரெனக் கருதி, நம்பக்கம் பெரு வெற்றியடைதற்காக முந்நூற்றுப்பத்து ரூபாச் சேர்த்தனுப்பினார்கள். இவர்கள் இக்காலத்துச் செய்த செயற்கருஞ் செய்கையாகிய கொடையையும், இவர்களுக்கு உளதாகிய அருட்பா அபிமானத்தையும், இசனாற் புலப்படக்கிடந்த சிவனடியார் பத்தி சிவபத்திகளையும், இன்னோரன்ன பற்பல நற்செய்கைகளையும் யாம் எக்காலத்தும், மறவேம்! மறவேம்!!

பொருள் கொடுத்தோர் பெயரும் தொகையும் வருமாறு:—

தேவகோட்டை.

மகா-ள-ள-ஸ்ரீ அரு. அரு. சோம. சோமசுந்தரச் செட்டியார் ரூ க00
,, அரு. ச. அருணாசலச் செட்டியார்......... ரூ உரு
,, அள. சுப. சுப்பையாச்செட்டியார்......... ரூ உரு
,, ராம. அரு. ராம. அருணாசலச்செட்டியார் ரூ உ0
,, பள.அ.ராம.சு.அ. வெங்கடாசலச்செட்டியார் உ0
,, ராம. பள. பழனியப்ப செட்டியார் ரூ க0
,, வெ. ஆ. தி. சிதம்பரச்செட்டியார்......... ரூ க0
,, பெரி. எ. சொக்கலிங்கச்செட்டியார்...... ரூ க0
,, தி. சு, பள. ப. பழனியப்பசெட்டியர் ... ரூ க0
,, நா. க. ஆ. இராமநாதச்செட்டியார்......... ரூ க0

அமராபதிபுதூர்.

மகா-ள-ள-ஸ்ரீ வயி. நாக. ராம. அ. வேங்கடாசலச் செட்டியார் ரூ ரு0
,, வயி. நாக. ராம. சு. இலக்குமணச்செட்டியார் ,, உ0

முதற்பெருங்கொடை.

என்னு மோருதவி யாதொருவன் யார்க்கெனினுந்
தன்னான் முடிவதெனிற் றானே முடித்தறலை
சொன்னான் முடித்த லிடையாகுஞ் சொல்லுகினும்
பன்னாண் மறுத்துப் புரிதல்கடைப் பான்மையதே.

இத்திருவிருத்தத்தானே கொடை, முதல் இடை கடையென முத்திறப்படுமென்பது விளங்குகின்றது. அவற்றுள் முதற்கொடை, ஒருவன் மற்றொருவனுக்குத் தன்னாலொருதவி செய்துமுடிக்க இயலுமெனின் அவன் சொல்லாதிருக்கத் தானே அதனைச் செய்து முடித்தல். இடைக்கொடை, அவன் சொன்னபின் செய்து முடித்தல். கடைக்கொடை, அவன் சொன்னபின்னும் பன்னாட்கழித்துச் செய்து முடித்தல்.

யாம் இவ்வழக்கின்பொருட்டு யாதேனும் உதவிபுரிதல் வேண்டுமென்று கேட்காதொழியவும்; இதற்குப் பொருளுபகரித்தல் உத்தமோத்தம சிவபுண்ணியமென் றுணர்ந்து தாமாகவே முதற்பெருங்கொடையாக [நானூறு ரூபா] அனுப்பினவரும், மேலும் இதன்பொருட்டு எவ்வளவு ரூபாச் செலவழிக்க நேர்ந்தாலும் அவ்வளவும் தாம் தருவதாக அடிக்கடி கடிதவாயிலாக உறுதிவாக்களித்துக்கொண்டிருந்தவரும் மேலே குறிக்கப்பட்ட வணிகப் பிரபுக்களைக்கொண்டு [முந்நூற்றுப்பத்து ரூபா] அனுப்புவித்தவரும், கட்டிமைபோலச் சைவசித்தாந்தமென்னும் மெய்க்கண்ணைப் பல்வகையானும் பரிபாலனஞ் செய்கின்றவரும், அதற்காகவே தமது உடல்பொருளாவி வாழ்நாளாதியவற்றைக் கொடுத்து விளங்குகின்றவரும், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்பெருமான் கருத்தின்படி ஆங்காங்குத் தமிழ் வித்தியாசாலை தாபித்தன் முதலிய உத்தமோத்தம சிவ புண்ணியங்களைச் செய்கின்றவருமாகிய மகாவித்துவான் ஸ்ரீமத் சி. சுவாமிநாத பண்டிதர் அவர்கள், யாம் இவ்வழக்கை வெல்லும்பொருட்டு ஒரு வகையானும் ஒரு சிறிதுந் தளர்ச்சியடையாவண்ணம் பன்முகமாக உபகரித்த அருமை பெருமைகளும், அருட்பா அபிமானமும், இன்னோரன்ன பிற நற்செயல்களும் இப்பத்திரிகையிலெழுதி முடியாவாகலான், அவற்றை மற்றோர் புத்தகவாயிலாக வெளிப்படுத்துவோம். அங்ஙனஞ் செய்தல் எற்றுக்கெனின் உலகினர் பண்டிதர் அவர்களின் நற்செயல்களை அறிந்து அவர்கள் செய்யுந் தருமங்களுக்குத் தாங்களும் உதவிபுரிந்து அப்புண்ணியங்களிற் பங்குபற்றி நற்கதிபெற் றுய்தற்பொருட்டேயாம்.

இப்பண்டிதரவர்களை யாம் முன்னர் அறியாதேமாகவும், இவ்வழக்கில் இவர்கள் பலவகையானுஞ் செய்த பலவரும்பெருஞ் சாதகங்கள், இவர்களுக்கு வைதிக சைவ மதபரிபாலனஞ் செய்தற்கணுள்ள ஆசைப் பெருக்கத்தை உண்மையாக விளக்காநின்றன. ஆகலான் இப்பெருந்தகைய குணமுஞ் செயலும் வாய்ந்த பண்டிதரவர்களும், இவர்கள் வைதிக சைவமத பரிபாலனத்தின் பொருட்டு மேற்கொண்ட வித்தியாசாலை தாபித்தன் முதலிய உத்தம சிவபுண்ணியங்கட்கு உதவி புரியும் சைவாபிமானிகளாகிய சிவஞானச் செல்வர்களும் நீடூழிகாலம் நிலவுலகின்கண் வாழ்ந்து, மேற்சுட்டிய புண்ணியங்களை விருத்தி செய்யும்படி, வேண்டுவார் வேண்டுவதேயீயும் பெருங்கருணைத் தடங்கடலாகிய சிவபெருமான் அருள்செய்யும் வண்ணம் அவரது திருவடிகளை எப்போதும் பிரார்த்திக்கின்றோம். மற்றைச் சைவாபிமானிகளும் இவ்வாறு செய்யும்படி கேட்டுக்கொள்ளுகின்றோம்.

மகாவித்துவான் ஸ்ரீமத். சி. சுவாமிநாதபண்டிதர் அவர்களும், வணிகப் பிரபுக்களும் இத்துணைப் பெரும்பொருளுதவியதும், வேண்டுங்கால் இன்னும் எத்துணையும் உதவுவேம் என்று முன்னிற்பதும் எற்றுக்கெனில், கருங்குழியாரைச் சார்ந்தவர்கள் தேவார திருவாசகமுதலியன திருமுறை திருவருட்பா எனப்படாவென்றும், செத்தொழிந்த இராமலிங்கபிள்ளையின் பாடல்களே அப்பெயர்க் குரியனவென்றும், அவர் பாடல்கள் தேவாரதிருவாசகமுதலிய பன்னிரு திருமுறைகளைப் பார்க்கினும் மிக்க உருக்கத்தைக் கொடுப்பனவென்று முரைத்த சிவத்துரோகத்திலே மற்றையோரும் அகப்படாது உய்யவேண்டுமென்னுங் கருணையும், பன்னிரு திருமுறைவிளக்கப் பாதுகாப்பாம் பரமபுண்ணியமும் பற்றியேயாம்.

சிவபெருமானைத் தம்முளடக்கி விளக்கிநிற்குந் திருத்தலங்களைப் புதுக்குவித்துச் சம்புரோட்சணஞ் செய்யும் மகாதருமத்தை யிதுகாறுங் கொள்ளைகொண்டார் நகரத்து வணிகப் பிரபுக்கள், இற்றையம்போது ஸ்ரீலஸ்ரீ நாவலர்பெருமானே மீட்டுந் தோன்றிநின்றாலொன்ன உண்மைச் சிவநேயமுடையார் யாவரானுங் கொண்டாடப்படும் சிவஞானதான பரிபாலன அருஞ்செயலினராம் சுவாமிநாத பண்டிதர் அவர்களும், வணிகப் பிரபுக்களும், சிவபெருமானையும், திருத்தலங்களையுந் தம்முளடக்கி விளக்கி நிற்குந் தேவாரமுதலிய பன்னிரு திருமுறைகளையும் ஜீர்ணோத்தாரணஞ்செய்து கையறியா மாக்களெல்லா, முய்தியுறுமாறு செய்த கிடைத்தற்கரிய பெறவருந் தருமத்தைக் கொள்ளை கொண்டனரென்பது கூறவும் வேண்டுமோ? திருக்கோயில் ஜீர்ணோத்தாரணம் யாவருஞ் செய்குவர். இத்திருமுறைச் ஜீர்ணோத்தாரண மகா தருமமோ, சிவபுண்ணியங்களெல்லாவற்றுள்ளுந் தலையாயதென்பதை யுணரும் மெய்யுணர்ச்சி யெல்லார்க்கும் வாராது. ஆகலின் இச்சிவபுண்ணிய மகாவிசேடதருமத்தைச்செய்வார் தவப்பயன் கனிகொண்டார் சிலரேயாவர். ஆகலின் இவரற மியாவரானும் போற்றப்படுந் தகைத்தே. ஒருதிருமுறையு ளொரு திருப்பாசுரத்தை யுன்னியகாலத்து, எத்தனையோ, கோடி திருத்தலங்களைப் பிரதிட்டை செய்த பெரும்புண்ணியப் பேற்றை யிறைவன் அளிக்குமாயின் பன்னிரு திருமுறைப் பிரதிட்டை செய்த இன்னவரெய்தும் பயன் எம்மானு மெவரானு மியம்பப்படுந் தரத்ததோ! இத்தகைய சிவபுண்ணியத்திற்கு ஈந்த பொருளும் சிவத்திரவியமேயாம்.

"விழுங்கலாஞ் செந்நெருப்பைக் கடிக்கலாந் திண்சிலையை விடத்தையாவி, யழுங்குறு வகையிழைத்துக் குடிக்கலா மவுடதத்தாலானார் செம்பொன், பழங்கணுற்கவர்ந்துபுசித் திடின்மிடற்றி லேபிடிக்கும் பயனில் யாக்கை, புழுங்கவே கனலுமுமி ழொறுக்குமித்த விடத்திரவு புகலொணாதால்."

என்னு மூதுரையை எமது சபையார்களும் அறிந்துளராகலின் இச்சிவதிரவியங்கள் எல்லாம், பன்னிரு

திருமுறைச் சீர்ணோத்தாரணப் பகுதியினன்றி வேறு வழிக்குச் சிறிது முபயோகப்பட்டன அல்ல. இவை சத்தியம்; சத்தியம்.

மகா-ள-ள-ஸ்ரீ அரு. அரு. சோம. சோமசுந்தரச்செட்டியார் அவர்கள் கேட்டுக்கொண்டபடி ஸ்ரீப்பண்டிதரவர்கள் இயற்றி எமக்கனுப்பிய திருமுறைப்பெருமை முதலியன இனி அச்சிட்டு வெளிப்படுத்தப்படும்.

இங்ஙனம்,

குரோதி௵ கார்த்திகைமீ 23உ } நா. கதிரைவேற்பிள்ளை. பு. பாலசுந்தரநாயகர்.

விக்கிரஹாராதனகண்டன வெதிரோகம்.

(தொடர்ச்சி.)

“கடவுள் தூணிலும் துரும்பிலுமாக எங்கும் வியாபித்திருப்பதாலும் எப்பொருளைவைத்துப் பூசித்தாலும் அவனைப் பூசித்தலாகு”மென விக்கிரஹத் துவாராகடவுளை வழிபடுவோர் சொல்வதாகவும், “அப்படியாயின் விக்கிரஹத்தை மந்திரத்தினால் ஸ்தாபனம் செய்வானேன்” என்பதும் “அஷ்டபந்தனம் செய்வது சுவாமி அசையாமல் ஆடாமலிருப்பதற்கா” வென்பதும், “அப்படியானால் அதற்குநாழிகை நட்சத்திரம் பார்க்கவேண்டியதென்ன” வென்பதும் துண்டுப்பத்திரிகையின் 5-வது வினா.

கடவுள் வழிபாட்டிற்கு விதிப்படி யமைந்த விக்கிரஹத்தைக் கண்டால் மட்டுமென்ற, தூணிலாவது துரும்பிலாவது சித்திரங்களிலாவது மற்றெவ்வித மார்க்கத்திலாவது அத்தகைய விக்கிரஹ ஸ்வரூபத்தைக் கண்டுவிட்டால் உடனே மனமுருகி வந்தித்துநிற்கு மகான்களுமுளரென்றும், அவ்வித பக்குவமடையாதாருடைய மனமும் பற்றி வழிபட்டுய்யும்பொருட்டு மந்திரத்தால் ஸ்தாபனம் செய்வதாமென்றும், சிம்மாசனத்தை ரிப்பேர் செய்வது சக்கிரவர்த்தி முதலியோர் பிரியமாய் வீற்றிருக்கும் பொருட்டாதலையொப்ப மருந்திளகிய பீடங்களை அஷ்டபந்தனம் செய்வது விக்கிரஹங்களுக்குப் பொருந்தியிருக்கும்படி என்றும், அது வழிபடுவோர் பொருட்டேயன்றி கடவுள்பொருட் டன்று என்றும், சரியான தினத்தில் அஷ்டபந்தனம் செய்தால் நீடித்தகாலம் உறுதியாகவிருக்குமென்றும், அப்படியில்லாவிடில் அஷ்டபந்தனம் அடிக்கடி செய்யவேண்டி வருமென்றும் இவ்வெதிரோகத்தில் ஷை வினாவுக்கு விடையளிக்கப்பட்டுளது.

எப்பொருளை வைத்துக் கடவுளைப் பூசித்தாலும் அவனைப் பூசித்தலாகும் என்பதும், எப்பொருளை வைத்தும் கடவுளைப் பூசிக்கலாமென்பதும் விக்கிரஹவாயிலாகக் கடவுளை வழிபடுவோரது கொள்கையா? இவ்வெதிரோகத்தில் இந்த 5-வது வினாவிற்குக் கொடுத்திருக்கிற விடையை ஆராயுங்கால், விக்கிரஹாராதனக்காரர் கொள்கைப்படி மேற்கண்டவிதம் எந்தப்பொருளை வைத்தும் கடவுளைப்பூசிக்கலாம்என்றாவது அப்படிப் பூசித்தால் அவனைப்பூசித்தலாகு மென்றாவது தோன்றவில்லை. மகான்களும் கூட விதிப்படியமைந்த விக்கிரஹங்களைக் கண்டவிடத்தும் தூணிலாவது துரும்பிலாவது சித்திரங்களிலாவது மற்றெவ்வித மார்க்கத்திலாவது அத்தகைய விக்கிரஹ ஸ்வரூபத்தைக் கண்டவிடத்தும் மனமுருகி வந்தித்து நிற்பார் எனச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, மற்றவிடத்து அவர் வந்தித்து நில்லாரென்பது பெறப்படுகின்றது. ஆகவே, மகான்களுங்கூட எந்தப்பொருளையும் பூசிக்கிறதாயுமில்லை. எந்தப்பொருளைக் கண்டாலும் கடவுளைப்பார்த்ததாக மனமுருகி வந்தித்து நிற்பதாகவுமில்லை. மகான்களல்லாத மற்றவர் வழிபட்டுய்ய மந்திரத்தால் ஸ்தாபனஞ்செய்த விக்கிரஹம் வேண்டியதவசிய மென்று விடையளிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, மகான்களல்லாத சாதாரண ஜனங்கள் மந்திரத்தினால் ஸ்தாபனஞ் செய்த விக்கிரஹங்களைக் கண்டால் மட்டும் மனமுருகி வந்தித்து நிற்பாரென்றும் அத்தகைய விக்கிரஹங்களைக்கூட, வேறிடத்துக் கண்டவிடத்து வந்தித்து நில்லாரென்றும் பெறப்படுகின்றது. கடவுள் எப்பொருளிலும் எந்த அணுவிலும் வியாபித்து சாட்சிபூதமா யிருக்கிறார் என்பது மெய்யா? பொய்யா? மந்திரத்தினால் ஸ்தாபனம் செய்திருந்தாலுமே செய்யாதிருந்தாலுமே விதிப்படியமைந்த விக்கிரஹங்களையும் அத்தகைய விக்கிரஹ ஸ்வரூபத்தையுங் கண்டவுடனே மகான்கள் மனமுருகி வந்தித்து நிற்கக் காரணமென்ன? அவர்கள் சம்பந்தப்பட்ட மட்டில் மந்திரத்தினால் யாதொரு பிரயோசனமுமில்லையா? அவர்கள் சம்பந்தப்பட்ட மட்டில் மந்திரத்தினாற் பிரயோசன மில்லையானால் சாதாரண ஜனங்கள்பாற் பிரயோசனப்பட்டதெப்படி? மகான்களும்கூட விதிப்படியமைந்த விக்கிரஹங்களையாவது அத்தகைய விக்கிரஹ ஸ்வரூபத்தையாவது காணாத விடத்து மனமுருகி வந்தித்து நில்லாததேன்? அவ்விடங்களில் கடவுளில்லையா? அல்லது அவ்விடங்களில் அவர்சக்தி குறைவா? விதிப்படியமைந்த விக்கிரஹ ஸ்வரூபம் மந்திரத்தினால் ஸ்தாபிக்கப்பட்ட விடத்தும் அப்படிக்கல்லாத விடத்தும் மகான்கள் மனதையுருக்கி வந்தித்து நிற்கும்படி செய்வதால் அவர்மனம் உருகக்காரணம் விதிப்படி யமைந்த விக்கிரஹமே தவிர மந்திரமல்ல வென்பது தெளிவல்லவா? மந்திரத்தினால் ஸ்தாபனம் செய்யப்படாத விதிப்படி யமைந்த விக்கிரஹ ஸ்வரூபத்தை மகான்களல்லாத சாதாரண ஜனங்கள் கண்டவிடத்து அவர்கள் மனது ஏனுருகவில்லை? அவர்கள் மனப்பக்குவக் குறைவுதான் அதற்குக்காரணம் போலும்! மந்திரத்தினால் ஸ்தாபனஞ்செய்யப்பட்ட விதிப்படி யமைந்த விக்கிரஹங்களைக் கண்டவிடத்து அவர்கள் மனம் உருகுவதற்குக் காரணம் மந்திரத்தினால் ஏதோ பயனிருக்கிறதாகத் தங்கள் பக்குவக் குறைவினால் அவர்கள் எண்ணியவெண்ணந்தான் போலும்.

(இன்னும் வரும்)

பாளையங்கோட்டை 12—2—05 } பாளையங்கோட்டை என்னும் திருமங்கைமாநகர்வாசி.

Instruction on elementary lessons from the Gospel of Health.

(Continued.)

சுகரண விவர சாஸ்திர ஸாரம்.

(தொடர்ச்சி.)

The food we eat.—நாம உண்ணும் உணவு.

“மருந்தென வேண்டாவாம், யாக்கைக்கு
அருந்திய தற்றது போற்றி யுணின்”—திருக்குறள்.

நாம் உண்ணும் உணவைப்பற்றி மிகவும் கவனித்து

நடக்க வேண்டியது சுகத்திற்கு அத்தியாவசியகமாம். "ஒருவன் உணவு எத்தன்மையதோ, அவ்வாறே அவனியற்கையுமாம்" என்று ஜர்மன் தேசத்தாருக்குள் ஒரு முதுமொழி வழங்கிவருகிறது. இது மிகவும் உண்மையானது. ஒருவன் உணவுக்கிசைய இரத்தம் மாறுபடும், ஆதலின் அவன் உடலின் ஒவ்வொரு பகுதியும் மாறுபடும். கெட்ட பதார்த்தங்களைப் புசிப்பவர்கள் மூளைமுதலிய வுறுப்புக்களும் அவற்றிற்கேற்ப மாறுபடவே, அவரது எண்ணங்களும், அவ்வெண்ணங்களினின்று பிறக்கும் விருப்பங்களும், இவற்றால் நிகழும் செயல்களும் தீயனவாகவே விளையலாம். மதுமாம்ஸாதிகளால் குட்சியை நிரப்பி வாழ்பவர் தம் உணவுக்கியைந்த பசிபவமான குணங்களையுடையராய், விலங்குகள் போன்ற சுபாவ வுணர்ச்சிகள் பெற்றோராவர், என்ற கொள்கையை அமெரிக்க வைத்திய சாஸ்திரியாராகிய ஸ்ரீ கெல்லாக் துரைமகன் பசுமரத்தாணிபோல நிலைநாட்டியிருக்கிறா . 'பைரன்' என்னும் ஆங்கில கவி 'இறைச்சி உக்கிரகுணத்தை மேலிடச்செய்வதால் அதை நான் புசிப்பதேயில்லை'யென்கிறார். 'சுவேதவர்ணிகளில் இன்னும் எத்தனையோபேர்கள் இவ்வுண்மையை நன்கறிந்தும், சிலர் தமது கொள்கைப்படி அனுஸரித்தும், இருக்கிறார்கள். ஸத்வகுணமுடையாராய்த் தம்மைக் கூடியவாறு உலகினுக்குப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று எண்ணுபவர்கள், தாம் உண்ணும் உணவினத்தை மிகவும் கவனிக்கவேண்டும். இவ்விஷயத்தைப் பற்றி நம்மனோர் விசேஷமாக அறிந்திருந்தார்கள் என்பதற்கு ஐயமில்லை. 'அஹிம்ஸாப் பரமோதர்மா' அதாவது, 'கொல்லாமையினும் இனியதான கடமை யொன்றுமில்லை' என்பதே ஆரியமறைக்கோளாம். தமிழ்ப் புலவரில் திருவள்ளுவநாயனார் சித்தாந்தமும் இவ்வாறேயாம். "ஊனைத் தின்று ஊனைப் பெருக்காமை முன்னினிதே" என்ற பூதஞ் சேந்தனாரின் வாய்மொழியைப் பண்டைக் காலத்தில் நாகரிகத்தால் மாட்சிமை பெற்றிருந்த கிரேக்கரில் சிறந்த தத்வசாஸ்திரியாரான ஸ்ரீ பிதாகரஸ் என்போர் பிறர்க்குபதேசித்தும் தாம் அநுஸரித்தும் வந்தார் என்று கிரேக்க சரித்திரத்தினின்றும் அறிகிறோம். 'ப்ளேடோ', 'ஸெநிகா' என்னும் பெரியோரும் இவ்வாறு கொள்கை கொண்டிருநததாகக் கேள்விப்படுகிறோம். ஆங்கில நாட்டில் (England) மிகச் சிறந்து விளங்கிய கணித பாகங்கள் எழுதுகையில் ஊனுணவு கொண்டதில்லை. வைத்தியசாஸ்திர வாராய்ச்சியில் தேர்ந்த மேனாட்டுப் பண்டிதர் சிலர் பல்லாண்டுகளாகச் சாகபதார்த்தங்களாலேயே வாழ்நாள் கழித்து, தம் சொந்த அனுபவத்தினாலே; "மரக்கறி பதார்த்தங்களே எவ்விதத்தினும் சுகத்திற் கடுத்தனவென்றும், கடினமான தேகவுழைப்பாவது, மனோமுயற்சியாவது செய்யும்போது, அல்லது செய்யவேண்டியபொழுது, இன்றியமையாதனவென்றும்" கூறியிருக்கிறார்கள். மாம்ஸத்திலுண்டான ஸத்தெல்லாம் பாலினுண்டு; பசுவின் ஊனிலும் அதன்பாலே நம் உணவிற்குச் சிலாக்கியமானது.

'கிறிஸ்துசமய வேதததில் மனிதன் சிருஷ்டியான வெகுகாலம்வரை கனியும் மூலமும் தின்று காலங்கழித்து வந்ததாகக் காணப்படுகிறது.

இரவின் தமத்தைப் போக்கக் கலையுடன் உதிக்கும் மதிபோல், இவ்வுலகிலுள்ளோரின் அகத்தமத்தை யொழித்து நல்லறிவுச்சுடர் கொளுத்துவதற்காகவே தோன்றினாற்போல் விளங்கிய ஸ்ரீ டார்வின் என்னும் கலைஞானியார், மனித வம்சத்தைப் பற்றிக் கூறுமிடத்து "கனியும் மூலமும் தின்று காட்டில் திரிந்த நாற்கை மிருகத்தினின்றே மனித வம்சம் தோன்றியிருக்க வேண்டுமென்று" உரைத்திருக்கிறார்.

ஆதலால் முற்காலத்தில் மனிதர் ஊனுணவு கொண்டிருந்ததில்லை என்பது விளங்குகிறது.'

தற்காலத்து வைத்திய சிகாமணிகளிற் சிறந்தோர், 'மாம்ஸ போஜனம் சுகத்திற்கு அநாவசியமாயிருப்பதுமன்றி, சில வியாதிகள் அணுகுவதற்குக் காரணமாயுமிருக்கிறது' என்று கூறுவதாலும், நமது ஜீரணவுறுப்புக்களுக்குக் கொஞ்சமும் தீங்கிழைபாத உணவினங்களாகிய காய்கறி, எளிதில் ஜீரணமாகும் தவசங்கள் முதலியன ஏதேஷ்டமாகக் கிடைப்பதாலும், நமது 'இன்பத்தையேனும் பெருமையையேனும் கருதி, வருத்தத்தையுணரக் கூடியதான அற்பமான பிராணிக்கும் துன்பம் கொடோம்' என்று அருமையான மொழிகளாற் கூறிய ஸ்ரீ Wardsworth (வேட்ஸ்ஓர்த்) கவியின் புத்திமதியைச் சிரமேற்கொண்டு உய்வோமாக.

[மறுமுறை, அன்னாசயத்தைப் பற்றியும், மற்றைய ஜீர்ணக்கருவிகளைப் பற்றியும், ஜீர்ண விருத்தாந்தத்தைப் பற்றியும் பிரஸ்தாபிப்பேன்.]

P, Srinivasachari,
VIII Class,
Hindu College, Tinnevelly.

அற்புதசரிதம்

இரண்டு நிருபநேயர்கள்கூடிப் பின்வருமாறு எழுதுகின்றனர்:—

"திருந்து திருப்புத்தூர் லிங்கப்பனேந்தல் சேர்ந்தவன்காண் செயலுதவுந் திறவல்லோன்காண், வருந்துமன்பர் தமக்குளுயிர் மயமானோன்காண் மாமறைகள் போற்று குருமணியாய் நின்று, மருந்திதென வருமடியார் வினைகள் தீர்க்கவந்தவன்காண் அந்தமுயர் வடிவானோன்காண், பொருந்துஜெகம் போற்றவரும நாகராஜப் புண்ணியன்காண் என்னகத்துள் பொறுப்புள்ளானே.

"கலியின் வலிமையில் நம் பெருமான் கருணையின் பெருமை" மதுரை ஜில்லா திருப்புத்தூர்த் தாலூகா லிங்கப்பனேந்தலென்ற ஒரு இடமுளது. அதற்கடுத்த திருத்தகாதபட்டியென்கிற கிராமத்தில் வசித்துவரும் சாணான் ஒருவன் தினந்தோறுங் காலை மாலை இருகாலத்திலும் ஷை திருப்புத்தூருக்குப் போய் கள்மரமேறி வருகிறதுவழக்கம். ஒருநாள்மாலை $7\frac{1}{2}$மணி சுமாருக்கு திருப்புத்தூரிலிருந்து திருத்தகாத பட்டிக்கு வருகிற மத்தியில், லிங்கப்பனேந்தல் என்றவிடத்தில் ஒரு அரவம் ஷை சாணானுக்கு நேரில் படமெடுத்து ஆடிக்கொண்டு நின்றது. சாப்பத்தைக்கண்டு திகைத்தவனாய், தப்பித்துப்போக முயன்றுஞ் சர்ப்பம் வழி விடாமையால் தன் கையிலிருந்த அரிவாளால் வெட்ட அச்சர்ப்பம் இருதுண்டாக விழுந்

துவிடவே, ௸ சாணன் தன்னில்லிற்கேகி அன்றுதினம் நீங்கி மறுதினமும் அதேநேரத்தில் மேற்கூறிய இடத்தில்வரவே, முன்போலவே இரண்டுநாகம் வந்து வழிமறித்துப்படமெடுத்துஆடிக்கொண்டுநின்றன. அவற்றையுமவ்வாறே சேதித்துவிட்டு தன்னில்லிற்கேகி அன்றிரவு நித்திரைசெய்யுங் காலத்தில் பகற்காலத்திற் கண்ட அரவம் கனவில்தோன்றி படமெடுத்தாடியது போலவும், "எங்களை வெட்டி சும்மா போட்டுவந்தாயே. அது நியாயமன்று. ஆகையால் எங்களையெடுத்து அடக்கஞ்செய்துவிடுவாயாகில் உன் இல்லாளுக்கிருக்கிற குன்ம வயிற்றுவலி நாளையத்தினம் உதயத்துக்குள் நீங்குவதோடு நீ நினைத்த காரியமெல்லாம் சித்தியாகு"மென்று வாக்களித்து மறைந்ததாகவும், கனவுகண்டு விழித்துப் பார்க்க ஒன்றுந் தோன்றாமையால் பிரமித்து கனவை நினைத்துக் கண்விழி மூடாமல் காலையில் எழுந்து பால், பழம், பச்சரிசி, தேங்காய்முதலான சாமக்கிரியையுடன் அரவத்தைச் சேதித்த இடத்திற்குச் சென்று மேற்கூறிய அரவமூன்றையும் ஒரேகுழியில்அடக்கஞ்செய்து விமலனைத்துதித்து வீட்டுக்கு வரவே, தன் மனையாளுக்கு நெடுநாளிருந்த கொடுநோய் தீர்ந்து சுகமே இருக்கக் கண்டதுமன்றி, அன்றுமுதல் அவன் நினைத்த காரிய முதலானவை கைகூடி வருவதையுங்கண்டதிசயித்து நிகழ்ந்த காரியங்களை அவ்வூர் வாசிகளுக் கறியச்செய்தான். இவ்விர்த்தாந்தைப் பலர் கும்புகூடிப் பேச நேரிட்டபடியால் திருப்புத்தூர்த் தாலூகா முற்றிலும் பரவியது.

"தம்பிப்பட்டிஎன்றவூரில் வேளாளர்குலத்தில் பிறந்த ஒருவருக்கு நெடுநாளாய் மேகநீர்உபத்திரவமும் கண்ணொளி இன்மையும் இருந்தன. திசைதப்பிக் கரையேறுவதற்கோர் துறைகாணாமல்மயங்கிய மாலுமி ஈஸ்வர கிருபையால் கரைகண்டதுபோலஇதைக்கேள்வியுற்றுஉடனேமேற்கூறியசர்ப்பசமாதிக்குப்போய் மூன்றுதினமவரை வசனமிருக்க வியாதி சௌக்கியமாய் நேத்திரம் புலப்பட்டதுகண்டு, அதற்கடுத்த தெம்மாப்பட்டியில் பத்துவருஷக்காலமாக நேத்திரம் ஒளியற்றிருந்த சேவகப்பெருமாள்செட்டியென்பவரும் மேற்கண்ட பிரகாரம் ௸ ஸ்தலத்துக்குப்போய் வசனமிருந்து பிரார்த்திக்க நயனஒளி பிறந்து சௌக்கியமடைந்த சங்கதி யெங்கும்பரவி அநேகவியாதியஸ்தர்கள் ௸ ஸ்தலத்திற்குப்போய் பிரார்த்தனைசெய்ய அவர்களுக்கு மவ்வாறே வியாதிநீங்கியும் நினைத்தகாரியம் சித்தியடைந்தும் வந்ததினால் ஈசனடியார்கள் யாவரும் வந்து ஒருங்குசேர்ந்து கொண்டாடுகிறார்களெனக்கேள்விப்பட்டதுடன் ௸ ஸ்தலமுண்டுபட்ட காலமுதல் பிரதம சுக்கிரவாரத்தன்று ௹ 10-ம் இரண்டாவது கிழமை ௹ 20, மூன்றாவது கிழமை ௹ 30 அப்பால் ஒவ்வொரு கிழமையிலும் ௹ 100, 250, 350, 500, 750, 900ம்வரையிலும் காணிக்கை வந்ததாகவும் நாளது விசுவாவசு வருஷம் சித்திரை௴ 2-௳ சுக்கிரவாரத்தன்று ௹ 1200 உண்டியல் வந்ததாகவும் கேள்வி. ஒரு கிழமையில் 500-வண்டி 5000ம் ஜனம்வரை வந்து சுவாமிதெரிசனஞ்செய்து அவரவர்கள் துன்பங்களை நீக்கிக்கொண்டு போகிறார்களெனவும் கேள்விப்படுகிறோம். சுமார் நாலு மாதத்துக்குள் ஆரண்யமான காடாகவிருந்தவிடத்தில் சர்வ ஜீவகாருண்ய தயாநிதியாய் விளங்காநின்ற சாக்ஷாத் எம்பெருமானே, உலகத்திலுள்ள அடியவர்களிடர்தீர்க்கும்பொருட்டு ௸ இடத்தில் ஆலயமமைக்கப்பெற்று நாகநாதரென்கிற திருநாமத்துடன் எழுந்தருளி நடத்திவருகிற அற்புதத்தை யாவருமறிந்து தங்கள் தங்கள் மனக்குறையைத் தீர்த்து உய்யும்பொருட்டும், எம்பெருமானுடைய மகிமையையறியாத எம்போலிகளாயுள்ள சிற்றறிவுடையோரறிந்து உய்யும்பொருட்டும் தங்கள் கனந்தங்கிய பத்திரிகையின் ஓர் கோணத்தில் பிரசுரஞ்செய்து வருமபடி தங்கள் மேலான கனத்தை வேண்டுகின்றோம்.

இப்படி அடியவர்களுக்கடியனான

ப. மு ரு. ம. வெள்ளைச்சாமிபிள்ளை, கொழும்பு.

S. மாணிக்கவாசக தேசிகர்."

கொழும்பு.

பத்திராதிபர் குறிப்பு.

"உறையூர்: ஸ்ரீ பஞ்சவர்ணேசுவர சுவாமி கோயில், சைவசித்தாந்த சபை"யின் ஆறாவது வருஷ அறிக்கை"யை சாவதானமாய்ப் படித்துப்பார்த்தோம்; மிகுந்த திருப்தியைத்தந்து நிற்கின்றது. சபையாரின் நன்முயற்சியும், ப்ரும்ஹஸ்ரீ கி. சுந்தரராமய்யரவர்கள் முதலிய புண்யசீலர்களின் நன்கொடை முதலியவும் மிகப்பாராட்டப்படத்தக்கனவாம். "புத்தகசாலை", "சைவசமய தர்மபாடசாலை" என்னும் இரண்டும் குறித்த சபைக்கு இரண்டு கண்மணிகள் போலும். அவற்றைக் காரியதரிசிகள் சபைத்தலைவர்கள் என நின்ற காரிய நிர்வாகிகள மிகவும் பாதுகாத்துவர வல்லவரென் றெண்ணுகின்றோம். அவ்விருமணிகளும் இன்னுமிக நன்கு பிரகாசிக்கும்படி செய்திடல்வேண்டும். "திருநட்சத்திர மஹோற்சவம்" "திருவருட்பா ஜெயத்துவசஸ்தாபனம்" "திருவருட்பா மகோற்சவம்" "பன்னிருதிருமுறைத் திருவருட்பா மகிமை"ப்பிரசங்கம் என்னுமிவையனைத்தும் குறித்த வருஷபூர்த்தி மகோற்சவத்தை மிகச் சிறப்பித்தனவாமென் றறிந்து களிகூர்கின்றோம். "திருநட்சத்திரமகோற்சவம்" என்னுந் தலைப்பின்கீழ் எழுதப்பட்ட வேண்டுகோள், குறித்த தலத்துத தர்மகர்த்தர்களால் அத்தியாவசியகம் கவனிக்கப்படற்பாலதேயாம். "இச்சபையின் தனசாலை" என்னும் வயிறு தனசாலை யதிபரவர்கள் வாயிலாய் இன்னும மிக நன்கு நிரம்பப்பெறுதல் வேண்டும். குறித்த சபையின் நோக்கங்களனைத்தும் யாதோரிடையூறுமின்றி இனிது நிறைவெய்துமாறு எம்மை ஆளுடைய அரசுகளின் திருவடிகளைச் சிந்திக்கின்றோம். குறித்த சபையின்கண் எமக்குள்ள நன்றியறிதலுக் கடையாளமாக இதுமுதல் மாதந்தோறும் அதற்கு நமது "திருநாவுக்கர"சைக, குறித்த சபையின் காரியதரிசியவர்கள் திருப்பெயரால் அனுப்பிவரக்கடவோம்.

***

"உறையூர்ச் சைவசித்தாந்த சபையின் ஆறாவது வருடபூர்த்தி மஹோற்சவச்சிறப்பு" எனப்பெரிய பிரபந்தம், குறித்தசபையின் கௌரவ காரியதரிசியவர்கள், ஸ்ரீமாந். நல்லசாமிபிள்ளையவர்களது அடிமைத் திறத்தை நன்கு விளக்குகின்றது. குறித்த பிரபந்தம், "இணங்கிலாவீசன்"என்னும் திருவிசைப்பாவின் திருவுளக் கருத்தைப் புலம்படத் தெரிக்கின்றது.

***

இவ்வருடமும் இத் திருநெல்வேலியிலே, எம்மையாளுடைய வாசுகளது குருபூஜா மகோற்சவம் வெகு சிறப்பாய் நடந்தேறியது. இம்மஹோத்ஸவம் நடத்திவரும் கடைசற்காரர்களே மிகப்பாக்கியவான்கள் போலும்.

***

" திருநாவுக்கரசுவளர் திருத்தொண்டி னெறிவாழ்க"

திருச்சிற்றம்பலம்.

Printed and published by M. Draviam Pillai
Aryaprakasini Press, Tinnevelly Bridge.